பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
24 FEB 1998

சூரிய காந்தி
SOORIYA GANDHI

விலை ரூபா 5-00

மலர் 1 சனிக்கிழமை 21 - 2 - 1998 இதழ் 20

வினோவின் தரம்
என்றும் நிரந்தரம்

புதிய சிங்கப்பூர் டிசைன் நகைகள்
22 கரட் நகைகள் பெற
நம்பிக்கையான இடம்

வினோ நகைப் பூங்கா

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# தமிழ் நாட்டில் குண்டு வெடிப்பு

# பாகிஸ்தான் உளவுப்படை சதி!

## பிரதமர் குஜ்ரால் குற்றச்சாட்டு

**கோயம் புத்தூரில் கடந்த வாரம் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்பிற்கும், நாட்டின் சில பகுதிகளில் நடந்த வன்செயல்களுக்கும் பாகிஸ்தானின் ஐ. எஸ். ஐ. உளவு ஸ்தாபனமே காரணம் என இந்தியப் பிரதமர் ஐ. கே. குஜ்ரால் குற்றஞ் சாட்டியுள்ளார்.**

மக்களவைத் தேர்தல் நடக்கும் சமயத்தில் நாட்டின் அமைதி நிலையைக் குலைக்கும் நோக்கத்துடனேயே பாகிஸ்தானின் ஐ. எஸ். ஐ. இந்த நாசகாரச்செயலில் ஈடுபட்டு வருவதாகவும் பிரதமர் குஜ்ரால் தெரிவித்தார்.

கர்நாடகா மாநிலத்தில் நேற்று நடந்த பிரச்சாரக் கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் இந்தியாவின் உறுதிப்பாட்டிற்கு பாகிஸ்தானால் ஏற்படக்கூடிய ஆபத்துக் குறித்து மக்கள் விழிப்பாக இருக்கவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் புலிகள் தாக்குதல்
## எட்டு ஊர்காவற்படையினர் பலி

நேற்று அம்பாறையில் ஊர் காவற்படையினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் எட்டுபேர் ஸ்தலதிலேயே மரணமானாகள்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது அம்பாறை மாவட்டத்தின் எல்லை கிராமங்களில் ஒன்றான 16ம்கொலனிப்பகுதியில் நடாத்தப்பட்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜேர்மனிய நாட்டு பிரதிநிதிகள்
## யாழ். குடாநாட்டிற்கு விஜயம்

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் ஜெர்மனிய அரசின் நிதியுதவியுடன் பல்வேறு திட்டங்களைச் செய்யற்படுத்திவரும் ஜி. ரி. இஸட் அமைப்பின் அதிகாரிகள் பயணமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

ஜெர்மனிய அரசின் பிரதிநிதியான திரு. வி. லொஜ் அவர்களும் சக அதிகாரிகளும் எதிர்வரும் 26ம் திகதி இங்கு வருகை தந்து மூன்று நாட்கள் தங்கியிருப்பார்களென வும் தெரியவருகின்றது.

இங்கு தங்கியிருக்கும் காலத்தில் ஜி, ரி. இஸட் அமைப்பின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் பல திட்டங்களை பார்வையிடுவார்களெனத் தெரிவிக்கப்படுகின்றது,

இவ்வருகையின் முதலாம் நாளான 26ம் திகதி யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதியான மேஜர் ஜெனரல் பல்லேகல அவர்களையும், பலாலி முகாமில் சந்தித்துப் பேசவுள்ளனர்.

வடக்கில்

## 10 வருட ஆட்சியை பிரபாகரனிடம் வழங்கவே சந்திரிகா விரும்பினார்

### அமெரிக்க ரைம் சஞ்சிகை தகவல் - -

சர்வதேச சஞ்சிகையான அமெரிக்க ''ரைம்' தனது பெப்ரவரி 9ம் திகதி இதழில் இலங்கை பற்றி நிறைய விஷயங்களை வெளியிட்டிருக்கிறது.

சஞ்சிகையின் அட்டைப் படம் எங்கோ தொலைவில் உள்ளதை நோக்கும் ஒருபால பிக்குவின் பிஞ்சு முகத்தை காட்டுகிறது.

''சுதந்திரமடைந்த இலங்கையில் கடந்த ஐம்பது ஆண்டுகளில் என்ன பிழைத்தது? என்று கேட்கிறது ரைம்!

அரசியல்வாதிகள் இனம் பற்றிய விஷயங்களை குரோதத்துடன் விசிறி விடுவார்களேயானால் ஒரு ஜனநாயகம் எவ்வளவு தூரம் கெட்டுப் போகலாம் என்பதற்கு இலங்கை நல்ல உதாரணம் என்கிறது இந்தச் சஞ்சிகை.

வடக்கில் மட்டு மல்லாது தெற்கிலும் இரவு வந்ததும் மக்கள் பயத்துடன் தான் வாழ்கிறார்கள். இரவில் கதவை தட்டும் யாருக்கும் இலங்கையில் எந்தப்பகுதியி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தோப்புக்கரணங்கள் போட்ட மாணவன் மயங்கி விழுந்தான்

தொடர்ச்சியாக தோப்புக்கரணம் போட்ட மாணவன் இடைநடுவில் மயங்கிவிழுந்த- பரிதாபச் சம்பவமொன்று யாழ்ப்பாணத்திலுள்ள மிகப்பிரபல்யமான கல்லூரியொன்றில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

ஆசிரியரினால் முன்கூட்டியே வழங்கப்பட்டிருந்த பாடவிதான வேலைகளைப் பூர்த்தி செய்யாத மாணவனை தண்டித்தபோதே அம்மாணவன் மயங்கி விழுந்தான். தன்னால் தொடர்ந்தும் தோப்புகரணம்போட முடியாதுள்ளதாக இடையே அவன் கூறியபோதிலும் ஆசிரியர் தொடர்ந்து வற்புறுத்தியமையாலேயே அவன் மயங்கி விழுந்ததாக தெரியவருகின்றது.

இதுபற்றி பெற்றோரொருவர் ''சூரியகாந்தி'' க்குத் தெரிவிக்கையில் ''அன்பு வழி போதித்த யேசு பிரானின் சீடரது பெயரில் நடாத்தும் கல்லூரிகளில் கூட அவரது போதனைகளைக் கைவிட்டுவிட்டனரே'' என விசனப்பட்டார்.

## கல்லடி பொலிஸ் காவலரண் தாக்குதல்

மட்டக்களப்பு வாவிக்கருகிலுள்ள கல்லடிப்பொலிஸ் காவலரண்மீது விடுதலைப் புலிகள் கடந்த 18ம் திகதி தாக்குதலொன்றினை மேற்கொண்டனர்.

நள்ளிரவு 12 மணியளவில் நடாத்தப்பட்ட இத்தாக்குதலில் தலா ஒரு பொலிஸாரும் போராளியும் பலியானதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஐந்து புலிகள் களப்பலி!

தமிழீழத்தின் பலபகுதிகளிலும் இடம்பெற்ற மோதல் சம்பவங்களின் போது தமது தரப்பில் ஐந்து போராளிகள் களப்பலியானதாக ''புலிகளின் குரல்'' நேற்று தெரிவித்தது.

கடந்த 13ம் திகதி கல்லடி பொலிஸ் காவலரண் மீதான தாக்குதலில் 2ம லெப்டினன் அபயகுமாா (குழந்தைவேல் சிவசண்முகம்பட்டக்களப்பு), 14ம் திகதி அம்பாறை மருதமுனைப்பகுதியில் நடைபெற்ற மோதலொன்றில் லெப்டினன் அருள்ஜோதி (மாணிக்கம் நாகேஸ்வரன் மட்டக்களப்பு), நேற்றுமுன் தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற வெடிவிபத்தொன்றில் வீரவேங்கை அமுதப்பன் (முருகேசு பாலச்சந்திரன் - கண்டி) அதேதினம் மாங்குளத்தில் நடைபெற்ற மோதலொன்றில் வீரவேங்கை சுமன் (முத்துராசா லியசின்) யாழ்ப்பாணம்) வீரவேங்கை வதனன் (இரட்ணம் நவரத்தினம் திருமலை) ஆகியோரே களப்பலியானதாக அது தெரிவித்தது.

## யாப்பு சீர்திருத்தத்திற்கு தமிழ்கட்சிகள் இணக்கம்

தமிழ் முஸ்லிம் அர்கியல் கட்சிகள் அரசியல் யாப்பு சீர்திருத்த நடவடிக்கைகளை ஜனநாயக ரீதியாக அமுல் செய்ய அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு அளிக்க இணக்கம் தெரிவித்துள்ளன.

இக்கட்சிகளின் பிரதிநிதிகள் புதிய அரசியல் யாப்புத் தொடர்பான கலந்துரையா

(6 ஆம் பக்கட் பார்க்க)

### இராஜதந்திர முயற்சிகள்

# தோல்வி அடைந்தால் ஈராக்மீது இராணுவ தாக்குதல் நடத்தப்படும்

## அமெரிக்கா எச்சரிக்கை

ஐ. நா. பொதுச் செயலர் பாக்தாத்தில் மேற்கொள்ளும் இராஜதந்திர முயற்சிகள் தோல்வி அடைந்தால் ஈராக் மீது இராணுவத் தாக்குதல் மேற்கொள்ளப்படும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

சதாம் ஹுசைன் ஆட்சியில் இருக்கும் வரை ஈராக் மீதான பொருளாதார மற்றும் தடைகள் நீக்கப்படமாட்டாது.

ஆனால் ஈராக்கிய மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உணவு மற்றும் மருந்துப் பொருட்களை ஐ. நா. மேற்பார்வையில் வழங்க அமெரிக்கா சம்மதிக்கும்.

அமெரிக்காவின் துணை வெளியுறவு அமைச்சர் ''ஸ்ரோக் ரால்போட்'' இத்தகவலைத் தெரிவித்துள்ளார்

நேற்று முன்தினம் பிரான்ஸ் அதிபர் ''ஜாக்ஷிராக்'' ஐ பாரிஸில் சந்தித்த கோபி அனான், அவருடன் வளைகுடா நிலைமை பற்றி விரிவாக ஆராய்ந்தார்.

இதன் பின்னர் செய்தியாளரிடையே பேசிய கோபி அனான், ஈராக் பிரச்சனையை இராஜதந்திர முயற்சியில் தீர்த்து வைப்பதற்கு நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைக்கு தேவையான விஷயங்கள் யாவும் தன்னிடம் இருப்பதாக கூறினார். எனினும் அவ்விடயங்கள் என்ன என்பதைக் கூற மறுத்துவிட்டார்.

இதேவேளை ஐ. நா. பொதுச் செயலருடன் ஆக்கபூர்வமான முறையிலேயே ஈராக் நடந்துகொள்ளும். ஏனெனில் ஈராக் இராஜதந்திரத் தீர்வையே தற்சமயம் விரும்புகிறது என்று ஈராக்கின் துணைத் தலைவர் ''ராவாய்ஜாஸீன்'' ஐ.நா. சபையில் வைத்து கருத்துக் கூறியுள்ளார்.

## தொழில் நுட்ப விரிவுரைகள் ஆரம்பம்

யாழ் தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரைகள் யாவும் நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளது.

பகல் நேர விரிவுரைகள் நாளைமறுதினமும், மாலை நேர விரிவுரைகள் இம்மாதம் 28ந் திகதியும் ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய மாணவர்களுக்கான அனுமதிக் கடிதங்கள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## புலிகள் தாக்கலாம் என மக்கள் இடம் பெயர்வு

புல்மோட்டைப் பகுதியில் அமைந்துள்ள இலங்கை இராணுவப் படை முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதல் நடத்தக்கூடும் எனப் பரவிய வதந்திகளைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான மக்கள் குறிப்பாக முஸ்லிம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாக ராய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள புல்மோட்டைப் பகுதியில் கனிய வளங்கள் தேங்கிக் கிடப்பது குறிப்பிடத் தக்கதாகும். இப்பகுதியினுடைய இயற்கை வளங்களைச் சுரண்டுகின்ற அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளின் நிறுவனங்களுக்குப் பாதுகாப்பாகவே புல்மோட்டை இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

## சேவை நலன் பாராட்டு விழா

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெறும் திரு. கா. தவராஜாவின் சேவைநலன் பாராட்டுவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

## யாரும் அற்ற அநாதைகளாய் நடுத் தெருவில் நின்றோம்

''எங்களின் கதறல் கேட்டு பொன்னம்பலவாணேசரும் கதவினை திறக்கவில்லை, தர்மகர்த்தாக்களும்கதவினை திறக்கவில்லை'' என்றார் கொழும்பு லொட்ஜ்களில் இருந்து பொலிஸாரால் பலாத்காரமாகவெளியேற்றப்பட்ட தமிழ்ப்பெண்மணியொருவர்.

யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் திரும்பியிருந்த அவர் எமது செய்தியாளரிடம் இது பற்றிதெரிவிக்கையில் ''வயது வந்த மகளுடனும், வெயில் கோரம்தாங்கமுடியாது வீரிட்டழுத கைக்குழந்தையுடனும் நடுவீதியில் நின்றேன் எங்கு போவதென்றேதெரியவில்லை இறுதியில் எல்லோரும் கோயிலில் போயாவது தங்கியிருப்போம் என்றமுடிவுக்குவந்தோம். அதன் பிரகாரமே பொன்னம்பலவாணேச்சர் கோயில் நோக்கி நடந்தோம்.

ஆனால் எங்களின்தலைவிதி போகுமிடமெல்லாம் துன்பம் தான். அநாதரவான எங்களை கோயில் கதவைத் திறந்து உள்ளே அழைக்க எவரும் தயாராகவில்லை. பக்தர்களின் கண்ணீரைவிட கோயில் பிரகாரத்தின் புனிதம் முக்கியமெனக் கருதினார்களோ என்னவோ? எனத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் மாலையில் ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் உதவியினாலேயே ஒருவாறு தங்குமிட வசதிகள்கிடைத்தது எனவும், அவரின் உதவி மறக்கமுடியாததெனவும், தமிழர் விடுதலைக் கூட்டணியுட்பட மற்றைய கட்சிகள் அறிக்கையிட்டுக் கிழித்ததைவிட வேறெதுவும் செய்யவில்லை எனவும் கோபாவேசமாக அவர் தெரிவித்தார்.

இங்கு அடிக்கடி நடைபெறும் சுற்றிவளைப்புத் தொல்லைகளில், ஆண்துணையற்ற நாங்கள் தப்பிப்பிழைப்பதற்காகவே கொழும்பு சென்றோம். ஆனால் இங்குள்ள நிலையைவிட கொழும்பு மோசமாகவே உள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

## பாமாலை இசைநாடா

மண்டைதீவு மகாவித்தியாலய ஆசிரியர் ம. சிவலிங்கத்தின் ஸ்ரீ வல்லிபுர நாதர் பாமாலை நூல் வெளியீடும் இசைநாடா வெளியீட்டு விழாவும் ஞாயிற்றுக் கிழமை பி. ப. 3மணிக்கு கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் மண்டபத்தில் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் திரு. துரைதவராசா தலைமையில் வெகுசிறப்பாக நடைபெறவுள்ளது.

## மக்களவைத் தேர்தலில் முக்கிய அமைச்சர்கள்

தமிழ் நாட்டில் நாளை நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலில் மத்திய அரசின் முக்கிய அமைச்சர்கள் போட்டியிடுகின்றனர்.

மத்திய அமைச்சர்களான ப.சிதம்பரம், எம். அருணாசலம், எஸ். தனுஷ்கோடி ஆதித்தன், ரி.வீ. வெங்கட்ராமன், எஸ் .ஆர். பாலசுப்பிரமணியம் ஆகியோரே போட்டியிடும் முக்கியமான அமைச்சர்கள் ஆவர்.

நாளை நடைபெறும் மக்களவைத் தேர்தலுக்கான இரண்டாம் கட்டவாக்கெடுபபில் சுமார் இரண்டு கோடியே அறுபத்துமூன்று இலட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர்.

## இடிந்து வீழ்ந்த கம்பத்திற்கு இருபத்தைந்தாயிரம் தண்டமா?

(கோப்பாய்)

உடைந்து விழுந்த மின் தூணிற்கு இழப்பீடாக இருபத்தையாயிரத்தினைவசூலிக்கப்பட்ட சம்பவமொன்று அண்மையில் கோப்பாயில் நடைபெற்றது, இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது தனியார் டிராக்டர் ஒன்று கோப்பாய் சந்திப்பகுதியிலுள்ள கம்பிகள் துருப்பிடித்து இடிந்து விழக்கூடிய நிலையிலுள்ள மின்தூணருகே நிறுத்தப்பட்டிருந்தது. இறங்கிச்சென்ற சாரதி அலுவல் முடிந்து மீள டிராக்டரை இயக்கமுற்படுகையில் மின் தூண் பெரும் சத்தத்துடன் விழுவதைக்கண்டார்' அப்பொழுதுதான் இழுவைப் பெட்டி தூணை மோதியிருப்பதையும் அவர் கண்டுகொண்டார். சாரதி உடனடியாக நைசாக மாறிக்கொண்டார்

விடயமறிந்து விரைந்த அப்பகுதி உள்ளூராட்சி சபை மின்விநியோக ஊழியர்கள் பலத்த முயற்சியின் மத்தியில் சாரதியையும் டிராக்டரையும் மோப்பம் பிடித்துக்கண்டுகொண்டனர். விழுந்ததூண், அயலிலிருந்ததூண்தொழிலாளர் கூலி அதுஇதுவெனகணக்குக்காட்டி இருபத்தையாயிரத்தை செலுத்துமாறு சாரதியை பணித்தனர்.

சாரதி தான் வாகனத்தின் உரிமையாளர் அல்ல என்றும் தானும் ஒரு கூலியாளே எனவும்கூறி தூண் முன்னரே சேதமுற்றிருந்தது என்பதையும் எடுத்துக்காட்டி கெஞ்சியதையடுத்து தண்டப்பணம் ஆயிரமாகக் குறைக்கப்பட்டது.

தண்டப் பணத்தைப் பெற்றவர்களிடம் பற்றுச்சீட்டுக் கேட்ட சாரதியை சபைக்கு வாவென்று அழைத்த ஊழியர்கள் பற்றுச்சீட்டினை இன்றுவரை வழங்காது இழுத்தடித்து வருவதாகச் சாரதி கவலை தெரிவித்துள்ளார். ''இப்பணம் சபைக்குச்சேரும் தண்டப்பணமோ அல்லது இவர்கள் பங்கிட்டு எடுத்துக் கொள்ள நான் வழங்கிய தண்டப்பணமோ'' என அவர் அங்கலாய்த்துக் கொண்டார்.

## தீ விபத்தில் பெண் மரணம்

தவறுதலாக இடம் பெற்ற தீவிபத்தில் குடும்பப் பெண் ஒருவர் மரணமானதாக தெரிவிக்கப்படுகின்றது. இச்சம்பவம் நேற்று (19-02-97) முன்தினம் மாலை கொக்குவில்பகுதியில் இடம்பெற்றது.

பிரஸ்தாப பெண் பலத்த எரிகாயங்களுடன் யாழ் பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் போதே மரணமானதாக தெரிவிக்கப்படுகிறது.

குளப்பிட்டி கொக்குவிலைச் சேர்ந்த திருமதி வி. மனோன்மணி 65 வயது)என்பவரே மரணமானவராவார் இவரது சடலம் மரண விசாரணயின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.


நியூ ஏ.பி.எம்

வீடியோ சென்ரர்

தரமான பழைய புதிய வீடியோ கசற்றுக்களை

வாடைக்குப் பெற்றுக்கொள்ள

NEW A. B. M.

VIDEO CENTRE

205 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்


## இல்ல விளையாட்டுப் போட்டி

யாழ்/புனித பத்திரிசியார் கல்லூரியின் மேற்படி போட்டி செவ்வாய்க்கிழமை (24-2-98) தியோகுப்பிள்ளை விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதமவிருந்தினராக யாழ்/ இலங்கை வர்த்தக வங்கியின் முகாமையாளர் திரு. எஸ் பி. ரஜீவனும்,

சிறப்பு விருந்தினராக நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அதிபர் திரு.ஜெ.யேசுதாசனும் கலந்து கொள்வர்.

## சர்வாதிகாரியின் சரித்திரக் காதல்

உலகத்திலுடைய மிகக் கொடுமையான சர்வாதிகாரிகளில் ஹிட்லரும் ஒருவன். அவனது நிழல்கூட அவனோடு நெருங்க அஞ்சும்.

அப்படிப்பட்ட ஹிட்லருக்கு இருந்த இன்பவல்லிகள் ஏராளம் ஏராளம். அவனது ஆசை நாயகிகளில் ஒருத்தியான பிறிஞ்சிற் என்பவள் ஒருநாள் ஹிட்லரைப் பார்த்து 'நீ ஏன் திருமணமே செய்து கொள்ளவில்லை, பிரமச்சாரியாக இருக்கப் போகிறாயா?' என்று கேட்டதற்கு, ஹிட்லர் சொன்ன பதில் புள்ளி விபரவியல் தெரிந்திருந்தால் இந்தக் கேள்வியை நீ கேட்டிருக்கமாட்டாய். ஜெர்மனியின் ஐந்து கோடிக் கன்னிப் பெண்களும் இப்போது என்னைக் காதலிக்கிறார்கள்எவளாவது ஒருத்தியை நான் கல்யாணம் பண்ணப் போய் மற்றவர்கள் அனைவரையும் நான் ஏமாற்ற விரும்பவில்லை - என்றானாம் பிரமச்சாரி என்று தன்னை பிரகடனம் செய்து கொண்ட ஹிட்லர்.

இவனை வக்கிரமான பால் உணர்வு கொண்டவன் என்று சொன்னால் மிகையாகாது. விதவிதமான பெண்களை நிர்வாணப் படுத்திப் பார்ப்பதே அவனது பகல்நேரப் பொழுதுபோக்கு. ஆனால் அவன் அனுபவித்தஆயிரக்கணக்கன பெண்களிலேயே ஒரே ஒருத்தியைத் தான் ஆழமாக விரும்பினான் என்றும் சொல்லப்படுகிறது.

அவளுடைய பெயர் ஈவாபிரான். காமம் கரையுடைத்துப் பாயும் ஈரநிலவு அவள் சர்வாதிகாரியாக உயர்வதற்கு முன்பேயே ஹிட்லர் சந்தித்தகன்னி இந்த ஈவாபிரான். இவர்கள் அறிமுகமாகிக் கொண்ட போது அவளுக்கு வயது 17. ஹிட்லருக்கு வயது 40. ஆனாலும் 23 வயது இடைவெளிகளிலும் உலகப் புகழ் பெற்ற ஒரு காதல் பூக்க முடிந்திருக்கிறது ஹிட்லருடைய பர் ஹாம் மாளிகையில் ஈவா தான் இரவு நேர மகாராணி.

இரண்டாம் உலகப் போரின் உச்சக்கட்டம். ரஷ்யப்படைகள் தலைநகர் பேர்லினை நெருங்கிக் கொண்டிருந்த போதுதான் அரண்மனையின் பாதாள அறையொன்றில் ஈவாவை மணமுடித்தான் ஹிட்லர்;

ரஷ்ய மற்றும் நேசநாட்டுப் படைகள் தலைநகருக்குள் நுளைந்து விட்ட செய்தி ஹிட்லருக்கு சொல்லப்பட்டது. முதலில் ஈவாவைசுட்டுக் கொன்றான்: அதே துப்பாக்கியால் தன்னையும் மாய்த்துக் கொண்டான்;

-ஸ்ரீ-

# சூரியகாந்தி

## "மெரிட்டோகிரசி"யை வரவேற்போம்

உலகம் போகிற போக்கைப் பார்க்கிறபோது வேடிக்கையாகவும் இருக்கிறது, வேதனையாகவும் இருக்கிறது.

நம்ம ஊர் நிலைமையோ வெறுமனே வேதனை தருவதோடு வெட்கத்தையும் தருகிறது.

பெரும்பாலான துறைகளிலும் இடங்களிலும் ''மீடியோக்கிரசி'' என்பது தான் ஆட்சியில் இருந்து கோலோச்சுகிறது.

''மீடியோகிரசி'' என் ப து மந்த புத்திக்காரர்களை தூக்கி உச்சத்தில் வைப்பது.

நமது தேக்க நிலைமைக்கு இதுவே தான் காரணமாக இருக்கிறது.

''மீடியோக்கிரசி'' என்பதிலிருந்து விலகி ''மெரிட்டோகிரசி'' யை நோக்கி நாம் நடைபோட வேண்டும்.

''மெரிட்டோகிரசி'' என்பது திறமைக்கும் ஆற்றலுக்கும் மதிப்புக் கொடுத்தல்.

'டிமோக்கிரசி' என்கிற ஜனநாயகம் ''மெரிட்டோகிரசி'' என்கிற திறமைக்கும் ஆற்றலுக்கும் ம தி ப் பு க் கொடுக்கும் நிலைக்கு வழிசெய்ய வேண்டும்.

அப்படிச் செய்யாமல் ''ஜனநாயகம்'' என்பது 'பணநாயகம்' என்பதற்கு வழி செய்யுமானால் பாதை பிழைத்து விட்டது என்றுதான் அர்த்தம்!

நாம் முன்னேறுவதற்கு ஒரே வழி ஜனநாயகத்தின் மூலமாக 'மெரிட்டோகிரசி'யை அடைவதுதான். விரைந்து முன்னேற அது ஒன்றேதான் வழி.

எல்லாரும் எல்லாம் தெரிந்த பண்டிதர்களாக இருக்க முடியாது.

''இதனை இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன்கண் விடல்'' - அதுதான் தேவை!

நமது சமூகம் ஒரு இக்கட்டான நிலையில் இருக்கிறது.

பயனற்ற நூல்களைப் படிப்பதால் காலம் வீணாகிறது, பண்பாடற்ற நண்பர்களால் மனம் பாழாகிறது, அலட்சிய மனப்பான்மையால் அறிவு மயங்குகிறது, வெறும் ஆரவாரத்தில் போலி வாழ்க்கையே மிஞ்சுகிறது.

இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வேண்டும்.

# சிவராத்திரியில் சிந்திக்கத் தக்கவை

(நேற்றைய தொடர்ச்சி)

**இனிமூன்றாவது சிந்தனை**

'இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.

இந்தவசனம் ஆறுமுக நாவலரியற்றிய இரண்டாம் பாலபாடத்தில் முதல் வசனம். இந்த வசனமும் வேதாகமங்களின் சாரமாயமைந்தது. யாவரும் எப்பொழுதும் சிந்திக்கற்பாலது இது அருமந்தவசனம்.

எமக்கு இப்பொழுது புண்ணிய விசேடத்தால் இந்த மனித சரீரங் கிடைத்திருக்கிறது. நாம் பிறவிகள் தோறும் எடுத்த சரீரங்களுக்கு எல்லை இல்லை. கடற்கரையிற் பரந்து கிடக்கும் மணற்குவியல்களின் மணலை ஒன்று ஒன்றாக எண்ணிக் கணக்கிட்டாலும் கணக்கிடலாம். நாம் எடுத்த சரீரவகைகளை எண்ணிக் கணக்கிட முடியாது; அநந்தம்.

புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேனென் பெருமான்''

என்றும் நாம் எடுத்த பிறப்புக்கள் சரீரங்கள் என்றிவைகளின் வரலாற்றைச் சொல்லி முறையிட்டு உருகுகின்றார் மாணிக்கவாசகப்பெருமான்.

நாம் பிறவிதோறு' எடுத்த சரீரத்த சரீரங்களுள் சிறந்தது மனித சரீரம். மழைக் காரிருட்டிலே வழிதெரியாது தடுமாறுகின்ற ஒருவனுக்கு, நல்லதொரு பின்சூழ் விளக்குக் கிடைத்தால் எப்படியிருக்குமோ, அப்படியாயிருக்கின்றது நமக்குக் கிடைத்தஇந்த மனிதசரீரம். இந்த மனித சரீரத்தை உபயோகிக்கிறமுறையில்உபயோகித்தால், முத்தியின்பம்பெறலாம் என்கிறார் ஆறுமுக நாவலர்.

நம்உயிர் இந்தச் சரீரத்தை இயக்குகின்றது. நம்மைச் சிவசக்தி இயக்குகின்றது. அந்தச் சிவசக்தி தான் இந்தச் சரீரத்தை நமக்கு அநுக்கிரகஞ் செய்தது. குருடுபட்டுக் கிடந்தவர்களுக்குக் கண்ணாடி சிறிது பார்வையை உதவுவது போல நமக்குக் கிடைத்த இந்தச் சரீரம், சிறிதே அறிவை விருத்தி செய்திருக்கின்றது. சில காரியங்களை இந்தச் சரீரத்தின் மூலம் அறிகின்றோம். ஆயினும், நம் ஆர் என்று நமக்குத் தெரியவில்லை. நீ பிறக்குமுன் என்ன செய்து கொண்டிருந்தாய் என்று நம்மை ஒருவர் கேட்டால் அதற்கு விடை தெரியாது விழிக்கின்றோம்; நாளைக்கு உன் கதி என்ன என்று கேட்டால் ஏங்குகின்றோம். நம்மையும் நம் கதியையும் நாம் அறியோம். இந்த நிலையில் பெற்றோர் சுற்றம் மனைவி மக்கள் காணி பூமி உத்தியோகம் அரசாங்கம் என்று கட்டியழுகின்றோம். அப்பொருள்களுக்கும் நமக்கும்என்ன தொடர்பு நம்மையே நமக்குத் தெரியாதபோது வேறு என்னதான் நமக்குத் தெரியும்!

''நாம் நம்மையும் நமக்கு அருளுகின்ற தெய்வத்தையும் அறியாதபோது நமக்கு உய்தி கிடையாது. கவலையாகிய இருள் உலகில் முழுகியபடிதான் இருக்கநேரும்' என்கின்றார் திருவள்ளுவ நாயனார்.

'தனக்குவமை யில்லாதான்
தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றலரிது'

என்பது திருவள்ளுவர் வாக்கு.

''நெஞ்சம் புண்ணாக
நெடுந்தூரம் தான்நினைந்து
துஞ்சுவதே மாந்தர்
தொழில்''

என்கின்றார் ஒளவைப் பிராட்டியார்.

நம் வாழ்நாள் முழுவதையும் அறியாமையாகிய இருள் மூடிக் கொண்டிருக்கின்றது. அதற்கு ஆணவம் என்பது மற்றொரு பெயர். வாழ்நாள் முழுவதையும் ஒரு இராத்திரியாகப் பாவித்து அதனை நான்கு கூறு செய்து, அறியாமையாகிய ஆணவ இருள் விடிதற்கு வழிவகுத்திருக்கின்றார்கள் ஞானவான்கள்.

வாழ்நாளின் முதற்கூறு பிரமசரியம்: கற்கவேண்டியவைகளைக் கசடறக் கற்கவேண்டியகாலம் இது. இரண்டாங் கூறு கிருகஸ்தம். உலகதொடர்புகளை அனுபவிக்கிற முறையில் அனுபவித்துப் புண்ணியங்களைச் சம்பாதிக்குங் காலம் இந்தக்காலம். மூன்றாங்கூறு வானப்பிரஸ்தம். விரதங்களால் உடம்பை வாட்டி அந்தக்கரணங்களை சுத்திசெய்து தவம் புரியுங் காலம் இந்தக்காலம். நான்காம் கூறு சந்நியாசம். பொய்யை விட்டு மெய்யை இறுகப் பற்றுங்காலம் இக்காலம். இங்ஙனம் வகுத்து அறியாமையைப் போக்க வழி செய்திருக்கின்றார்கள்.

சிவராத்திரியை நான்கு யாமமாக வகுத்து, ஒவ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

பண்டிதமணி

**சி. கணபதிப்பிள்ளை**

இந்தியத் தேர்தல் களம்

# அமைதியான சோனியா அரசியலில் இறங்கியது ஏன்?

உலகம் போற்றும் தலைவராக இருந்தவர் அன்னை இந்திரா காந்தி, அவரின் தனிப்பட்டவாழ்க்கையில் சோகத்திற்குப் பஞ்சமில்லை சஞ்சய் காந்தியின் விபத்து மரணம் இந்திராவை அதிரவைத்தது. சஞ்சயின் மரணத்தைத் தொடர்ந்து மருமகள் மேனகா காந்தியின் செயல்கள் இந்திராவை வேதனைப் படுத்தின. மாமியை விமர்சிக்கும் மருமகளாகவே மேனகா விளங்கினார். சஞ்சயின் ஒரே மகனை-தனது பேரனை இந்திரா பார்ப்பதற்கும் தடைவிதித்தவர் மேனகா.

இந்தத் துன்பங்களையெல்லாம் தாங்கிய இந்திராவுக்கு ஆறுதலாக, ஆற்றுப்படுத்தக் கூடியவராக இருந்தவர் ராஜீவ் காந்தியின் மனைவி-இத்தாலியப் பெண் சோனியாதான் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள்.

பாரதப் பெண் மேனகாவால் பட்ட துன்பத்தை இத்தாலியப் பெண் சோனியா களைந்தார். மாமி மதிக்கும் மருமகளாக-கணவனின் குறிப்பறிந்த மனைவியாக சோனியா இருந்தார்.

நேருவின் குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றுவதில் மேனகாவிற்கு இல்லாத அக்கறை சோனியாவுக்கு இருந்தது. இந்தியாவின் கலாசார விழுமியங்களை ஏற்றுமதித்து நடந்த சோனியா பண்பான பெண் என்ற பதவியை பாரதத்தில் எடுத்துக் கொண்டார்.

இந்தியாவைப் பொறுத்தவரை எந்த நாட்டவர் என்பது அங்கு முக்கியம் அல்ல இந்தியக் கலாசாரத்திற்கு மதிப்பளித்து ஒருவர் நடந்தால் அதிலும் வேற்று நாட்டவர் ஒருவர் அப்படி நடந்தால், அவரை இந்திய மக்கள் மனதார மதிப்பார்கள் மறக்க மாட்டார்கள்.

இந்திராவின்மதிப்பிற் குரிய மருமகள் சோனியா தன்னை அரசியலில் ஈடுபடுத்த விரும்பவில்லை. அப்படி ஒரு தேவையும் இல்லை ஆனால் கால் அசைவில் ஏற்பட்ட மாற்றங்கள் இந்திராவை ராஜீவை இல்லா தொழித்தது அதன் பின்பு சோனியா அரசியலை அறவே விரும்பவில்லை,

ஆனால் இன்று அதே சோனியா அரசியலில் - தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். அரசியலில் ஈடுபடவிரும்பாத சோனியாவின் மனம் எப்படி மாறியது. இது எதிர்க்கட்சிகள் முணுமுணுக்கும் கேள்வி.

இந்திய வரலாற்றில் விருட்சமான காங்கிரசை ஏனைய அரசியல் கட்சிகள் தோற்கடிக்கும் அளவிற்கு அதன் ஆரோக்கியம் குன்றிவிட்டது. இந்நிலையில் காங்கிரசைக் காப்பாற்றக் கூடிய -நேருவின் குடும்பத்திலுள்ள ஒரே ஒரு நபர் சோனியாதான் இச் சந்தர்ப்பத்தில் காங்கிரசிற்காகத் தான் பிரச்சாரம் செய்யாவிட்டால் அதன் எதிர் காலம் கேள்விக் குறி என்பதை சோனியா நன்கு அறிவார். எனவே கட்சிக்காகப் பிரச்சாரம் செய்யாவிட்டால் அது காங்கிரசுக்கு மட்டுமல்ல தான் புகுந்த இந்திரா குடும்பத்திற்கும் செய்யும் துரோகம் என நினைத்த சோனியா பிரச்சாரத்திற்குச் சம்மதித்தார்.

காங்கிரசைக் காப்பாற்றும் பணியில் சோனியா தீவிரமாக இறங்கியதற்கு இன்னுமோர் காரணமும் உண்டு. நேருவின் குடும்ப வாரிசுகளான தனது இரு பிள்ளைகளும் இந்தியாவை ஆளவேண்டும் அதற்குச்சந்தர்ப்பம்கிடைக்க வேண்டுமானால் காங்கிரஸ் கட்சி உயிருடன் இருக்க வேண்டும் அப்படியாயின் கட்சிக்காகத் தான் பிரச்சாரம் செய்வதே ஒரே வழி என சோனியா தீர்மானித்து அரசியலில் இறங்கினார்.

**"விதுரன்"**

## கழுத்தறுப்புத் திருவிழா

சின்ன



''லாலா''வின் இடத்துக்கு
''ராசா'' வத்தி வைக்க
முந்தி வந்த ''சாமி''
வரவிருக்கும் ''லிங்க''த்துக்கு
சறுக்கான் கட்டை போட
கோணமா மலையினிலே
கழுத்தறுப்புத் திருவிழா
கோலாகலமாக நடக்கிறது

துரை

# நாட்டில் நடைபெறுகின்ற யுத்தம் மனிதாபிமானத்திற்கு எதிரானது

## தேசிய சமாதானப் பேரவை குற்றச்சாட்டு

''யுத்தத்தின் மூலம் சமாதானம்'' என்ற வாதத்தை நிராகரிக்கின்றோம். ''எமது சார்பில் யுத்தம் செய்ய வேண்டாம்'' எனக் கூறுகின்றோம். தேசிய சமாதான பேராளர் மகாநாடு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற போது மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

இலங்கை மக்களாகிய நாம் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் சிவில் யுத்தத்திற்கான ஏகோபித்த எதிர்ப்பைத் தெரிவிப்பதுடன், நீதியும் கௌரவமும் மிக்க சமாதானம் ஒன்றை ஏற்படுத்தும் நோக்கில் மேலும் தாமதமின்றி பேச்சு வார்த்தையை ஆரம்பிக்குமாறு அரசாங்கத்திற்கும் எல்.ரி.ரி.ஈக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

எமது நாட்டில் சகல இனங்களினதும் சமூகங்களினதும் சமத்துவம், கௌரவம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றைக் கொண்ட தமது தலைவிதியைத், தாமே தீர்மானிக்கின்ற உரிமை அங்கீகரிக்கப்படுதலே ஒரு நீதியானதும் உன்னதமானதுமான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு அடிப்படையாகவிருக்கும் என நாம் கூறுகின்றோம்.

இவ்யுத்தமானது எமது பழமையான உணர்வுகளையும் புனிதமான அடிப்படைகளையும் தகர்த்தெறியும் நிலைமைக்கு தள்ளியுள்ளது.

பத்தாயிரக் கணக்கானவர்கள் தமது உயிர்களைப் பலி கொடுத்துள்ளனர் என்பதுடன் பல இலட்சக்கணக்கானவர்கள் அகதிகளாகி துன்பமிகு சூழ் நிலையில் வாழ வேண்டிய நிலைமைக்குள்ளாக்கப்படுள்ளனர்.

பல்லாயிரக் கணக்கான பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர் என்பதுடன் பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் தாய், தந்தையரை இழந்து அனாதைகளாக்கப்பட்டுள்ளனர்.

உயிர்களினதும் சொத்துக்களினதும் அழிவு மற்றும் சமூகக்கட்டமைப்பின் சீரழிவு அகியவை வடக்குக் கிழக்கு மற்றும் எல்லைப்பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களை துன்பத்தில் மூழ்கடித்துள்ளது என்பதுடன் அவர்களின் உயிர் வாழ்தலை பரந்தளவில் சீரழித்தும் உள்ளது.

இச்சிவில் யுத்தமானது மனிதாபிமானத்திற்கும் சமூகத்திற்கும் எதிராக இழைக்கப்படும் ஒரு குற்றச் செயல் என நாம் கூட்டாக தீர்மானிப்பதோடு இவ்யுத்தத்தை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வந்து பேச்சு வார்த்தை ஊடான தீர்வொன்றின் மூலமாக நீதியானதும் நிலைக்கக் கூடியதுமான சமாதானத்தை அடைவதற்காக பொருத்தமான கட்டமைப்பொன்றையும் இயந்திரம் ஒன்றையும் உருவாக்குவதற்காக பாரதூரமானவாறும் திட சங்கற்பத்துடனுமான பங்களிப்பினைச் செய்வதற்கு அரசாங்கமும் எல்.ரீ.ரீ.ஈயும் முன்வர வேண்டுமென இத்தால் வேண்டுகோள் விடுகின்றோம்.

# இரகசியமான முறையில் அரசு பேசுகின்றதா?

அரசாங்கம் திட்டமில்லாத பொருளாதாரக் கொள்கையினை முன்னெடுத்துச் செல்கின்ற, இதனாலேயே பொருட்களின் விலையில் அதிகரிப்புக்கள் ஏற்படுகின்றன,

பொருளாதார ஸ்திர மற்ற தன்மை காணப் படுமேயானால் அபிவிருத்திப் பணிகளை எவ்வாறு இந்த அரசாங்கத்தினால் முன்னெடுத்துச் செல்ல முடியும்?

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஐ,தே, கட்சியான எமது ஒத்துழைப்புத் தேவை எனக் கூறும் ஜனாதிபதி அதே வேளையில், வடபகுதி நிர்வாகம் பிரபாகரனிடம் பத்து வருடங்களுக்கு வழங்கப்படும் என ரைம்,சஞ்சிகைக்கு பேட்டி ஒன்றைக் கொடுத்துள்ளார்.

அவ்வாறானால் பாராளுமன்றத்துக்கு அறிவிக்காமலே அரசாங்கம் இரகசியப் பேச்சு வார்த்தைகளை பிரபாகரனுடன் மேற்கொள்கின்றதா? இது பற்றிய உண்மை நிலையை நீதி அமைச்சர் பாராளுமன்றில் அறியத் தர வேண்டும்,

இவ்வாறு ஆளுங்கட்சி மீது குற்றம் சுமத்தியுள்ளார், ஐ,தே,க, பிரமுகரான ரொனி டீ மெல்,

# அரிசி விலை குறைப்பு ஆனால் பயன் இல்லை

கொழும்பு மொத்த விற்பனை சந்தை அரிசி விலையை குறைத்துள்ளது ஆனால் சில்லறைச் சந்தையில் இவ் விலைக்குறைப்பின் பலாபலன்களை காண முடியவில்லை என்று சந்தை வட்டாரங்கள் கூறுகின்றன.

மொத்த விற்பனைச் சந்தையில் சம்பா அரிசி விலை 1600/- ரூபா ஆகவும் புழுங்கலரிசி விலை 925/- ரூபா ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது. இந்த விலைக் குறைவினால் ஏற்பட்டுள்ள நன்மைகள் சில்லறை வர்த்தகர்கள் மூலம் பாவனையாளர்களுக்கு கிடைக்க வேண்டும். ஆனால் சில்லறை வர்த்தகர்களின் திட்டமிட்ட முயற்சி காரணமாக இவ்வாறு நடைபெறுவதில்லை என்று புறக்கோட்டை மொத்த விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

## சித்திரக் கண்காட்சி

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் கலைத்திறனை வெளிப்படுத்துமுகமாக யாழ் நகர பிரிகேடியர் மெண்டிஸ் அவர்களினால் யாழ் மத்திய கல்லூரியில் எதிர்வரும் 26-2-98ல் சித்திரக்கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. கோட்டமாவட்ட, மாகாண, தேசிய மட்டத்தில் பரிசில்கள் தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்களுக்கு வழங்கப்படுமென மேற்படி காட்சிப்படுத்தலுக்குப் பொறுப்பான ஆசிரிய ஆலோசகர் கோ. கைலாயநாதன் தெரிவிக்கிறார்.

(சி-1)

## சிவராத்திரி.....

வொரு யாமத்திலும் ஒவ்வொரு வகையான அபிசேகம் நிவேதனம் அருச்சனை ஆகியன செய்து, துயில் கூடாது சிவலிங்கப் பெருமானைப் பூசிக்கின்றோம். இந்த நான்கு யாமப்பூசை, வாழ் நாளாகிய இரவைப் பிரமச்சரியம் முதலிய நான்கு கூறு செய்து வழிபாடு நடத்துவதில் விழிப்பாயிருக்கவேண்டும் என்பதை ஞாபகம் செய்வதாயிருக்கின்றது.

நமது சரீரம் கடவுள் உபகரித்தது, கடவுளின் சொத்து. கடவுளின் சொத்தைக் கடவுள் வழிபாட்டுக்கே உபயோகிக்க வேண்டும்.

''கடவுள் நம்மை மனதினாலே சிந்திக்கவும், நாவினாலே துதிக்கவும், தம்மால் அநுட்டிக்கப்படும் குருலிங்கம் சங்கமம் என்னும் மூவகைத் திருமேனிகளையும் கண்களினாலே தரிசிக்கவும், கைகளினாலே பூசிக்கவும் கும்பிடவும், தலையினாலே வணங்கவும், கால்களினாலே வலஞ் செய்யவும், தமது பெருமையையும் திரு அடியாரின் பெருமையையுங் காதுகளினாலே கேட்கவுமே இந்த மனித சரீரத்தைத் தந்தருளினார்.

'இம்மனித சரீரம்' பெறுதற்கரியது ஆதலாலும், இது இக்கணம் இருக்கும் இக்கணம் நீங்கும் என்று அறிதற்கரிதாகிய நிலையாமையை உடையதாதலாலும், நாம் இடையறாது எக்காலமும் சிவபெருமானிடத்து அன்பு செய்தல் வேண்டும்.

திருநாவுக்கரசு நாயனார் அருளிய 'தலையே நீவணங்காய்' என்ற பதிகம், அங்கம் ஒவ்வொன்றினதும் பணியையும் நமக்கு உறுதுணையாவார் சிவபெருமான் ஒருவரே என்பதையும் எடுத்துக்காட்டுகின்றது. அப்பதிகம் வாழ் நாளாகிய இராத்திரியைச் சிவராத்திரியாக்குவதற்கு உபாயம் கூறுகின்றது. நாம் அப்பதிகத்தை நாடோறும் ஓதி அப்பதிகக் கருத்தைச் சிந்தித்து, அதன்வழி இயன்ற அளவுக்கு நின்று, சிவப்பேறு பெற்று உய்வோமாக.

''உற்றார் ஆருளரோ உயிர்
கொண்டு போம்பொழுது
குற்றாலத் துறை கூத்தனல்
லால் நமக்கு
உற்றார் ஆருளரோ''

### வெளிநாடுகளில்

# வேலை செய்வதற்கு பெண்கள் அரசின் அனுமதி பெற வேண்டும்

தனியார் முகவர் நிலையங்களினூடாக வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு பெறும் பெண்கள் அடுத்த மாதம் 1ம் திகதி தொடக்கம் சேவை உடன் படிக்கை ஒன்றை கைச்சாத்திடப்படல் வேண்டும்.

இலங்கை வேலைவாய்ப்பு பணியகம் இவர்களின் பெயர்களை பதிவு செய்துசம்பந்தப்பட்ட நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு அனுப்பிவைக்கும்.

இதே வேளை வெளிநாடுகளில் சென்று வேலை பார்க்கும் இலங்கைப் பணிப்பெண்கள் தமது எஜமானர்களால் இம்சைப்படுத்தப் படுவதாக கிடைக்கப்பெற்ற தகவல்களை அடுத்து இனிவரும் காலங்களில் எந்தவொரு இலங்கைப் பெண்ணும் இனி மேல் வேலை வாய்ப்புப் பணியகத்திலே பதிவு செய்யாமல் வெளிநாடுகளுக்கு செல்ல முடியாது என்று வேலை வாய்ப்புப் பணியகத்தின் தலைவர் ஹத்ல அபயரத்ன கூறியுள்ளார்.

## அறிமுகவிழா

ஆத்மஜோதி நா. முத்தையா ஞாபகார்த்த மலர் அறிமுக விழா எதிர்வரும் 23ம் தேதி திங்கட்கிழமை சாவகச்சேரி இந்துக்கல்லூரிலூ மண்டபத்தில் நடைபெற இருக்கிறது.

# கைப்பற்றிய இடங்களிற்கு பத்திரிகையாளர் விஜயம்

ஜயசிக்குறு இராணுவ துருப்பினர் வெலி ஓயாவிற்கும் ஒலு மடுவிற்கும் இடைப்பட்ட புதிதாக கைப்பற்றியுள்ள இடங்களில் தமது நிலைகளைப் பலப்படுத்தி வருகின்றனர்.

கஜபா புரத்திற்கும் ஒலு மடுவிற்கும் இடையில் சுமார் 48 கி.மீ. பிரதேசம் தற்சமயம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதாக. பிரிகேடியர் கிரான் ஹான்கொட தெரிவித்துள்ளார்.

அண்மையில் அப்பிரதேசத்திற்கு விஜயம் செய்த பத்திரிகையாளர்களிடம் பிரிகேடியர் இதனைக் கூறியமை குறிப்பிடத்தக்கது.

### அமைச்சர்

# 'மங்களவின்'பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

தெற்காசிய தொலைத் தொடர்பு ஆணைக்குழுவில் இலங்கை அங்கத்துவம் பெறுவது தொடர்பாக தொடர்பு சாதன அமைச்சர் மங்கள சரவீர சமர்ப்பித்த பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இப்பிராந்திய தொலைத் தொடர்பு செயற்பாடுகள் குறித்து இந்த ஆணைக்குழு கொள்கைத் தீர்மானம் எடுப்பதோடு இத்துறைசார்ந்த பிரச்சனைகளுக்கு தீர்வுகாண்பதற்கும் உதவி வருகின்றது.

# வீடமைப்பு திட்டத்திற்கு 20 கோடி ரூபாய் கடன்

அடுத்த 6 மாதங்களில் வீடமைப்பு அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனம் சுமார் 20 கோடி ரூபாய் வீடமைப்புக் கடனாக வழங்க முன்வந்துள்ளது.

வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை இவ்வாண்டு 50, 000 வீடுகளை தென்பகுதியில் கட்டுவதற்கான திட்டம் ஒன்றை அமுல் செய்யவிருக்கின்றது.

இத்துடன் நகர சபை அபிவிருத்தித் திட்டங்கள் துரிதமாக மேற்கொள்ளப்படுவதோடு கொழும்பு நகரம் தென்னாசியாவிலே ஒரு வர்த்தக கேந்திர நிலையமாக மாறிவிடும் தேசிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அமைச்சர் இந்திக குணவர்த்தன தெரிவித்துள்ளா.ர்

## ஈழத்துச்சிதம்பரம் கும்பாபிஷேகம்

காரைநகர் ஈழத்துச்சிதம்பரத்திற்கு ரூபா 25 லட்சம் செலவில் எதிர்வரும் ஆனி மாதம் ஏழாந்திகதி கும்பாபிஷேகம் நடாத்த விருப்பதால் அதற்கான முயற்சிகளில் மேற்படி ஆலய திருப்பணிச் சபையினர் ஈடுபட்டுள்ளனர்.

## புதிய அதிபர்

தீவகத்தின் அல்லைப்பிட்டி பாராசக்தி வித்தியாலயத்திற்கு அதிபராக கி. ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் 12-2-98 தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார். மேற்படி வித்தியாலயத்தில் அதிபராக கடமை புரிந்த திருமதி ஆ. சண்முகநாதன் நல்லூர் தெற்கு விக்கினேஸ்வரா வித்தியாலயத்திற்கு அதிபராக சென்றுள்ளார்.

(சி-1)

# சதாம் ஹுசைனை ஆதரித்தால் சமாதான முயற்சி பாதிக்கப்படும்

## - இஸ்ரேல் எச்சரிக்கை

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனை ஆதரிப்பதால் இழுபறி நிலையில் உள்ள மத்தியகிழக்கு முயற்சிகள் பாதிக்கப்படும் என்று இஸ்ரேல் எச்சரிக்கை செய்துள்ளது இதே வேளையில் ஈராக்குக்கு ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டம் தெரிவித்த பலஸ்தீனர்கள் இஸ்ரேலியதுருப்புகளுடன் மோதிக் கொண்டனர்.

காஸா பகுதியில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த இரண்டு ஆர்ப்பாட்டங்களை பாலஸ்தீன விடுதலை இயக்க பொலீஸார் தடை செய்வதற்கு உத்தரவிட்டுள்ளனர் என்று பலஸ்தீனர்கள் தெரிவித்துள்ளனர்.

இத்துடன் ஈராக் தாக்குதல் நடாத்தும் எனக்கருதி பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இஸ்ரேல், சுவீடனிடமிருந்து 45,000 சிறுவர் வாயுப் பாதுகாப்பு முகமூடிகளையும் சக்கர நாற்காலிகளையும் கொள்வனவு செய்திருக்கிறது.

நரம்புகளைப் பாதிக்கும் வாயுவில் இருந்து சிறுவர்களை பாதுகாக்கும் நோக்குடனே முகமூடிகளும் சக்கர நாற்காலிகளும் பயன்படுத்தப்படும் என்று இஸ்ரேல் சிவில் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## வடகொரியாவில் பஞ்சம்

வடகொரியாவில் ஏற்பட்டுள்ள உணவுப்பற்றாக்குறை காரணமாக அங்குள்ள பல இலட்சக்கணக்கான மக்கள் விரைவில்பட்டினியால் மரணமடைவார்கள் என்று சுவீடனைச்சேர்ந்த உதவிவழங்கும் பணியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கை விமானப் படையில் விரைவில்

# வெடிக்கவுள்ள பாரிய ஊழல் குண்டுகள்

ஊழல் என்பது 'கான்சர்' மாதிரி இந்த நாட்டையே கெடுத்துக்கொண்டு இருக்கிறது.

'இலங்கை விமானப்படை'யில் இடம் பெற்றுள்ள ஊழல்கள் மெல்ல மெல்ல இப்போது வெளியே வரத் தொடங்கி இருக்கின்றன.

இந்த ஊழல்கள் பற்றி 'சண்டே ரைம்ஸ்' செய்தியாளர் இக்பால் அத்தாஸ் நிறையவே செய்திகள் சேகரித்து வெளியிட்டிருக்கிறார்.

அதன் விளைவாக கொலை மிரட்டலுக்கும் ஆளாகி இருக்கிறார்.

விமானப் படையிலேயே

## "மாறிவரும் உலகம், மாறாத அதிகாரிகள்"

வேலை செய்கின்ற பலர், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இது பற்றி கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள்!

யூ. என். பியின் பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறளை போன்றவர்கள் இது தொடர்பாக பாராளுமன்றத்திலும் நிறைய பேசி இருக்கிறார்கள்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவும் விமானப்படை நடவடிக்கை பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பித்திருக்கிறது. இங்கு விசாரணைக் குழுவின் தலைவராக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இருந்திருக்கிறார்.

மற்றைய உறுப்பினர்களாக முன்னாள் ராணுவத் தளபதி ஒருவரும் முன்னாள் விமானப்படைத் தளபதி ஒருவரும், முன்னாள் பொலிஸ்மா அதிபதியும், மேலதிக சொலிசிஸ்டர் ஜெனரலும் பணியாற்றி இருக்கிறார்ாள்.

ஊழல்கள் நிறைந்து விளங்கும் விமானப்படையின் தளபதிக்கும் சக்தி மிக்க சில உயர் அரசியல் தலைவர்கட்குமிடையில் நெருக்கமான தொடர்புகள் இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்னும் இரண்டொரு வாரங்களில் விமானப்படை தொடர்பான சகல ஊழல்களும் அம்பலத்துக்கு வந்துவிடும் என்றே எல்லாரும் எதிர்பார்க்கிறார்கள்.

விமானப்படைத் தளபதி ஒலிவர் ரணசிங்காவின் பதவிக் காலம் சென்ற 17 ஆம் தேதியுடன் முடிவடைந்திருப்பதுதான் இந்த எதிர்பார்ப்புக்கு காரணம்.

- ''குளோபல் ஓமாற'' ஸிடமிருந்து நன்றாக பாவிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு தமது 'சீவியத்தை முடித்துக் கொண்ட' எம்ஐ 24 ரக ஹெலிகளை வாங்கியமை.
- மாதமொன்றுக்கு ஆயிரம் அமெரிக்கடொலர்களுக்கு வேலைக்கு அமர்த்தக்கூடிய ரஷ்ய பைலட்டுக்களை மாதமொன்றுக்கு ஏழாயிரத்து எண்ணூறு அமெரிக்கடொலர்களுக்கு வேலைக்கு அமர்த்தியமை.
- இவ்வாறு பத்து பைலட்டுகள் வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள். ஆனால் பத்திரிகைகளில் இது விஷயம் வெளிவரத் தொடங்கியதும் அவர்கள் உடனடியாக நிறுத்தப்பட்டார்கள்.
- லேசரால் வழிநடத்தப்படும் குண்டுகள் ஒவ்வொன்றும் நாற்பதினாயிரம் அமெரிக்க டொலருக்கு வாங்கப்பட்டன. இதில் ஏற்பட்ட மொத்தச்செலவு 3,760,000 அமெரிக்க டொலர்கள் இத்தொகை 223 மில்லியன் ரூபாவாகும். இந்தக் குண்டுகள் எட்டுத்தர எட்டு மீற்றர் இலக்குப் பிரதேசத்தில் குறிதப்பாது அடிக்கக்கூடியன என்று சொல்லப்பட்டன.

ஆனால் செயற்பாட்டின் போது இலக்குகளிலிருந்து 200 மீற்றர் தூரம் தள்ளியே விழுந்தன.

இங்கே சொல்லப்பட்டது மாதிரிக்கு ஒன்றுதான். இன்னும் இப்படி எத்தனையோ இருக்கின்றன.

- அவசரக் கொள்முதல் என்ற பெயரில் தான் பல மோசடிகள் நடைபெற்று இருக்கின்றன.

வானிலிருந்து வேவு பார்த்தல் என்ற தேவைக்காக ஓர் உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டது. இதற்காக 6.5 மில்லியன் அமெரிக்க டொலர் செலவாயிற்று.

ஆனால் புலிகள் அதிஉயர் அலைவரிசை கொண்ட செய்தித் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துவதால் இக் கொள்வனவினால் எந்த விதமான பிரயோசனமும் இல்லாது போய்விட்டது.

- மேற்குறித்த செய்தித் தொடர்பு தொடர்பான கருவியைப் பொருத்துவதற்காக 4.5 மில்லியன் அமெரிக்கன் டொலர் செலவில் 'பீச்கிறாவ்ட்' ரக விமானம் ஒன்று வாங்கப்பட்டது.

இப்படி வாங்கப்பட்டவை எல்லாம் யாருடைய அனுமதியும் இல்லாமலேதான் வாங்கப்பட்டன.

- இலங்கை வரலாற்றிலேயே முதன் முறையாக விமானப்படை விமானிகளுக்கு பயிற்சி அளிக்கும் பொறுப்பு ஒரு தனியார் கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டது. இதற்காக அத்தனியார் விமானக் கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்தபோது ஒரு விமான ஓட்டியை பயிற்சி அளித்து 'பைலட்'டாக கொண்டுவருவதற்கு ஒரு மில்லியன் ரூபா தருவதாக ஒப்புக் கொள்ளப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் பயிற்சி அளிக்கப்பட்ட முதல் குழுவில் எட்டுப் பேர் இருந்தனர்.

பயிற்சி தரமற்றதாக இருந்தது.

சில பயிற்சிகளுக்கு விமானப்படையின் விமானங்களும், எரிபொருளும் பயன்படுத்தப்பட்டன. ஆனால் ஒப்பந்தப்படி பணமோ தனியார் கம்பெனிக்குச் சென்றது.

- மேற்படி பயிற்சிகளை வழங்குவதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த தனியார் கம்பெனி, வெளிநாட்டில் வதியும் ஒருவரை அழைத்து இப்பயிற்சிகளை வழங்கி, பணத்தை விமானப்படையினரிடமிருந்து பெற்றுக்கொண்டது.
- வெளிநாட்டில் வசிக்கும் அப்பயிற்றுனரை நேரடியாக விமானப்படையே இங்கே வரவழைத்திருந்தால் செலவு எவ்வளவோ குறைந்திருக்கும்.
- சென்ற அக்டோபர் 95 இலிருந்து டிசம்பர் 96 வரைக்கும் ராணுவத்தினரை வடக்கிற்கு ஏற்றி இறக்கியதற்காக மட்டும் ''லயன் எயர்'' விமானக் கம்பெனி 8.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை கட்டணமாகப் பெற்றிருக்கிறது.

இந்த வேலையை செய்வதற்கு 'லயன் எயர்'' விமானக் கம்பெனிக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது.

கேள்விப்பத்திரம் எதுவும் கோரப்படாமலே இந்த வேலை ''லயன் எயரு''க்கு தரப்பட்டது.

''லயன் எய''ருக்கு இந்தக் காலத்தில் கொடுக்கப்பட்ட பணத்துக்கு ஏ என் 32 ரக விமானங்கள் மூன்றை சொந்தமாகவே வாங்கியிருக்கலாம்.

''லயன் எய''ருடனான இந்த ஒப்பந்தம் இன்னும் தொடர்ந்து வருகிறது.

இந்த ஒப்பந்தத்தினால் பயன் பெறுகின்ற ''பெரிய மனிதர்கள்'' யார்?

## நடுக்க வாத சிகிச்சையில் முன்னேற்றம்!

நடுக்க வாத நோய்க்கு சிகிச்சை அளிப்பதில் முக்கியமான முன்னேற்றம் கண்டிருப்பதாக ஸ்பெயின் நாட்டு ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். உலகெங்கும் இலட்சக் கணக்கான முதியோர்கள் நோயினால் பாதிக்கப் பட்டுள்ளார்கள்.

கழுத்து முடிச்சுகளில் உள்ள திசுக்களை எடுத்து மூளையில் ஒட்டவைப்பதன் மூலம் மேற்படி நோயினை குணப்படுத்த முடியும் என்பதை எலிகள் மீது நடாத்தப்பட்ட பரிசோதனை புலப்படுத்தியதாக ''நியூரோன்' என்னும் மருத்துவ சஞ்சிகை கூறுகின்றது.

## ஜேர்மன் பா.உ கள் 6பேர் இலங்கை விஜயம்

ஜேர்மன் பாராளுமன்ற உறுப்பினர்கள் 6 பேர் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை இலங்கை வர இருக்கின்றார்கள்.

ஜேர்மன் பாராளுமன்றத்தில் தென்னாசிய குழுவில் உறுப்பினர்களாக இருக்கும் இவர்களில் அரசாங்க கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் அடங்குவர்.

இவர்கள் 4 நாட்கள் இலங்கையிலே தங்கி இருந்து இலங்கை - ஜேர்மன் பாராளுமன்றநட்புறவுச் சங்க உறுப்பினர்களை சந்திப்பார்கள். இச்சந்திப்பின் போது இரண்டு நாடுகளினதும் ஆர்வமுள்ள சமகால விடயங்கள். இருதரப்பு உறவுகள் இரண்டு நாடுகளின் பாராளுமன்றங்களுக்கிடையே ஒத்துழைப்பை வளர்ப்பதற்கான வழிவகைகள் பற்றி அவர்கள் ஆராய்வார்கள்.

இக் குழுவினர்இலங்கையில் முக்கியஅரசாங்கதலைவர்கள் பிரமுகர்கள் ஆகியோரை சந்தித்து பேச்சு வார்த்தைகளை நடத்துவதுடன் இலங்கையில் உள்ள ஜேர்மன் அபிவிருத்தி திட்டங்களுக்கும் விஜயம் செய்வார்கள்.

## அரிசி விலை ஏற்றத்துக்கு அரசே காரணம்

வெளிநாடுகளில் அரிசியின் விலை பதினான்கு சதவிகிதத்தால் வீழ்ச்சி கண்டுள்ள போதும் எமது நாட்டில் இறக்குமதி செய்யப்படும் அரிசியின் விலை ஏன் அதிகரித்துள்ளது.

வறுமை வேலையின்மை பொருட்களின் விலை அதிகரிப்பு இவையாவற்றுக்கும் இந்த அரசாங்கத்தின் பொறுப்பற்ற தன்மையே காரணம் என்று நேற்றைய தினம் பாராளுமன்றில் உரையாற்றிய ஐ. தே. க. பிரமுகர் கருணாசேன கொடித்துவக்கு அரசு மீது குற்றம் சாட்டியுள்ளார்.

## பாடசாலை அதிபர் தேடியலைகிறார்

காரைநகர் வலந்தலை தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை காரை நகரிலிருந்து இடம்பெயர்ந்து 126, நாவலர் வீதி (மனேகரா தியேட்டருக்குப் பின்புறம்) என்ற முகவரியில் இயங்கிக் கொண்டிருக்கும் வேளை 03-10-95ல் இடம்பெயர்ந்து தென்மராட்சிக்குச் சென்று மீண்டும் யாழ்ப்பாணம் வந்து மேற்குறிப்பிட்ட இடத்தில் பாடசாலையைத் தேடிய பொழுது அங்கு அமைக்கப்பட்டிருந்த கொட்டில்கள், மற்றும் பாடசாலை மாணவரின் முக்கிய பத்திரங்கள் மற்றும் தளபாடங்கள் என்பன காணாது போய்விட்டன. மாணவர்களுக்கு விடுகைப்பத்திரம், மற்றும் பரீட்சைப் பெறுபேறுகள் என்பன வழங்க முடியாது திண்டாடுகின்றனர்மேற்படிபாடசாலையில் அதிபர் இன்றுவரை மேற்படி பொருட்களை எவர் எடுத்துச் சென்றிருக்கலாம் என்றுதேடிய வண்ணம் இருக்கின்றார்.

## உலர் உணவு நிறுத்தப்பட மாட்டாது

யாழ் மாவட்டத்தில் இடம் பெயர்ந்த மக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப் பட்டு வருகின்ற 'உலர் உணவு விநியோகம் இம்மாதத்துடன் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக மக்களிடையே வதந்தி ஒன்று பரவியுள்ளது.

ஆனால் உலர் உணவு விநியோகம் தொடர்ச்சியாக வழங்கப்படும் என்று செயலக வட்டாரங்கள் கூறுகின்றன.

## மகளிர் தின கட்டுரை போட்டி

எதிர் வரும் மார்ச் 8ஆம் திகதி அனைத்துலக ரீதியில் கொண்டாடப்பட விருக்கும் சர்வதேச மகளிர்தினத்தை ஒட்டி மகளிர் விவகார அமைச்சினால் நாடளாவிய தாக பாடசாலை மாணவர்க்கு (ஆண்டு 10, 11,12ல் கல்வி கற்போர் மட்டத்தில்) பெண்ணியத்தின் மகிமையை பறை சாற்றும் நோக்கமாக சுமார் 500 சொற்களை உள்ளடக்கும் பின்வருந்தலைப்புக்களில்

'மகளிர் உரிமைகள் மனித உரிமைகளில்'

'பெண்கள் அறிந்தால் சமூகமே அறியும்'

'சிறுவர்களுக்கெதிரான வன்செயல்களை எவ்வாறு தவிர்ப்பது'

கட்டுரைகளை எழுதியனுப்புமாறு மாகாணக் கல்வித் திணைக்களம் (வடக்கு கிழக்கு) கோரிக்கை விடுத்துள்ளது. மும்மொழிகளிலும் நடாத்தப்படும் இப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெறுபவர்களுக்கு (வலய, மாகாண, தேசிய- மட்டங்களில்) பெறுமதி மிக்க பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

(கி - )

## டிராக்டரில் இருந்துவிழுந்து சில்லுக்குள் அகப்பட்டு மரணம்

ஓடிக்கொண்டிருந்த டிராக்டர் வண்டியில் இருந்து தவறி விழுந்தவர்அதன் சில்லுக்குள் அகப்பட்டு மரணமானார் இச்சம்பவம் கடந்த பதினாறாம் திகதி கரவெட்டிப்பகுதியில் இடம்பெற்றது. சம்பவம்பற்றி கூறப்படுவதாவது மக்காட் இல்லாத டிராக்டர் வண்டியில் சாரதிக்குப் பக்கத்தில் எழுந்துநின்ற வண்ணம் பயணம் செய்தவரே தவறி விழுந்து சில்லிற்குள் அகப்பட்டு படுகாயமடைந்தார் படுகாயமடைந்த இவர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார் இவரே நேற்று முன்தினம் 19-2-98 அங்கு மரணமானார்.

கப்பூது வெளி கரவெட்டியைச்சேர்ந்த சிவகுருநாதன் அருட்செல்வம் (வயது 21) என்பவரே மரணமடைந்நவராவார். இவரது சடலம் மரணவிசாரணையின்பின்உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு

யாழ்ப்பாணம் வலயம் ஒன்றின் கல்விப்பணிப்பாளர் சு. இரத்தினராசா அவர்கள் சுகயீனங்காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமை மேலதிக சிகிச்சைக்காக கொழும்பிற்கு கொண்டு செல்லப்படவுள்ளார்.

(சி-1)

## உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று

நவாலியூர் சோமசுந்தரப் புலவர் ஞாபகார்த்தமாக நவாலி நியூ ஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடாத்தும் ஒன்பது பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் முதற்சுற்று இன்று மாலை மூன்று மணிக்கு மானிப்பாய் அட்டகிரி சைவ வித்தியாசாலை மைதானத்தில் ஆரம்பமாகும். இவ்ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அராலி மாவத்தை விளையாட்டுக்கழகம் மோதும். இதன் பின்னர் நான்கு மணிக்கு அளவெட்டியுத் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளவாலை யங் கென்றீஸ் விளையாட்டுக் கழகம் மோதும்.

## ஈராக் மீதான தாக்குதல் தளம் தர இந்தியா மறுப்பு

ஆயுதக் கண்காணிப்பு நெருக்கடி தொடர்பாக ஈராக் மீது தாக்குதல் தொடுக்கப்படுமேயானால் அதற்கு தனது வான் பரப்பு கடற்பரப்பு, நிலப்பரப்பு என்பனவற்றை பயன்படுத்திக் கொள்ள அனுமதி மறுக்கப்பட்டுள்ளதென இந்தியா தெரிவித்துள்ளது.

1991 ஆம் ஆண்டு நடந்த முதலாவது வளைகுடா யுத்தத்தின்போது எரிபொருள் நிரப்புவதற்கு அமெரிக்கப் போர் விமானங்களுக்கு முன்னர் அனுமதியளித்திருந்த இந்தியா பின்னர் அதனை வாபஸ் பெற்றுக் கொண்டது தெரிந்ததே.

தேர்தல் பிரசாரம் ஒன்றில் உரையாற்றிய இந்தியப் பிரதமர் குஜ்ரால், பெரிய நாடொன்றில் இருந்து தன்னிடம் தொலைபேசி மூலம் இதற்கான அனுமதி கோரப்பட்டதாகவும் அதனைத் தான் மறுத்துவிட்டதாகவும் கூறினாரே தவிர அது எந்த நாடு என்பதனை மட்டும் கூறவில்லை.

திரு குஜ்ராலின் தற்போதைய கொள்கையானது 91ஆம் ஆண்டுகாலப் பகுதியில் அவர் வெளியுறவு அமைச்சராக இருந்தபோது கடைப்பிடித்த கொள்கையை ஒத்ததாகவே உள்ளது. இந்திய அரசு வழங்கியிருந்த அனுமதியை அன்றைய வெளியுறவு அமைச்சரான குஜ்ராலே வாபஸ் பெற்றுக்கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### 10 வருட...

லும் யாரும் கதவைத் திறப்பதில்லை என்கிறது இச்சஞ்சிகை

சுதந்திரமடைந்த போது சொர்க்க தீவாக இருந்த இலங்கை இப்போது நரகக் குழியாக மாறிக்கொண்டிருக்கிறது. இதற்கு முக்கியகாரணம் சிங்கள தமிழ் இனங்களுக்கிடையே ஏற்பட்ட ''உராய்வு' தான் என்கிறது,

புலிகளைப் பற்றிக்கூறும் போது அவர்கள் தனியான ஒரு சுதந்திர நாட்டுக்காகப் போராடிக் கொண்டு இருக்கிறார்கள். புலிகளின் தலைவர் பிரபாகரன் ''றுத்லெஸ் அண்ட கிளெவர்' என்கிறது.

1994ம் ஆண்டு சந்திரிகா குமாரணதுங்கா ஆட்சிக்குத் தெரிவு செய்யப்பட்டபோது அது ஒரு புதிய திருப்பமாகத் தான் இருந்தது.

நீண்ட காலமாக கொடிவிட்டுப் படர்ந்து பரந்திருக்கும் இனப் பிரச்சினையை எப்படியும் தீர்ப்பேன் என்ற உறுதிமொழியை சந்திரிகா தந்திருந்தார்.

(மக்கள் அவரை நம்பினார்கள்) ஆனால்பிரச்சினை இன்னமும் தீர்ந்தபாடில்லை என்கிறது ''ரைம்''

பிரபாகரனுக்கு ஒரு சுதந்திரமான பெட்டகத்தை அளித்திருந்தேன். அவர் யுத்தத்தை நிறுத்தினால் பத்து ஆண்டு காலத்துக்கு வடக்கின் ஆட்சியை அவரிடம் ஒப்படைக்கத் தயாராக இருந்தேன். அவர் தனது கெரில்லாப் படையை பொலிசாகப் பாவித்து ஆட்சி செய்யலாம் என்று சொல்லியிருந்தேன். ஆனால் இதற்கு புலிகளின் தலைவர் சம்மதிக்கவில்லை என்று ரைம் சஞ்சிகையிடம் சந்திரிகா கூறியிருப்பதாகவும் அச்சஞ்சிகை எழுதியிருக்கிறது.

பிரான்ஸ் நாட்டில் உள்ள சொர்போன் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்ற சந்திரிகா இப்போது தமிழ் படிக்கிறார். வாரத்தில் இரண்டுமணி நேரம் இதற்கென ஒதுக்கியிருக்கிறார் என்கிறது ''ரைம்''

சந்திரிகாவின் காலம்தான் இனப்பிரச்சனைக்கு ஒரு தீர்வு வருவதற்கான சூழ்நிலைகள் நிறைந்த காலம் என்கிறது ரைம்.


புலமைப் பரிசில் மொழி விருத்தி

தமிழ்

ஆண்டு 5

(இலங்கை அரசினால் நடத்தப்படும் ஆண்டு 5 புலமைப் பரீட்சையில் வினாவப்படும் மொழி விருத்தி சம்பந்தமான அனைத்துவகை வினாக்களும் அடங்கியது)

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம்.


### ஆப்கானிஸ்தானுக்கு விமான மூலம் உதவி

ஆப்கானிஸ்தானின் வட பகுதியில் பூகம்பம் ஏற்பட்ட பகுதியில் உள்ள மக்களுக்கு உதவிப் பொருட்களுடனான விமானம் முதல் முறையாகச் சென்றிருக்கின்றது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் ஐக்கிய நாடுகளும் கூட்டாக விமான மூலம் கம்பளிகளையும் இதர அவசரப் பொருட்களையும் விநியோகித்தன. அடுத்த சில நாட்களில் விமானங்கள் மூலம் மேலும் பல உதவிப்பொருட்கள் அப்பகுதியில் போடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### யாப்பு.-

டல் ஒன்றில் நேற்று கலந்து கொண்ட போது அமைச்சர் ஜி. எல். பீரிஸிடம் தமது உடன்பாட்டை தெரிவித்துள்ளனர்.

இந்தப் பேச்சு வார்த்தைகளின் ஆரம்பத்தில் உரை ஆற்றிய அமைச்சர் பீரிஸ் அரசியல் யாப்புச் சீர்திருத்த நடவடிக்கைகளில் அந்நிய நிலைமை பற்றி விளக்கிக் கூறினார்.

ஜனாதிபதி இப்பணியினை திடசங்கற்பத்துடனும் தியாக சிந்தையுடனும் மேற்கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளைப் பாராட்டிய கட்சிப்பிரதிநிதிகள் இப்பணி குறித்த காலத்தினுள் பூர்த்திசெய்யப்படுவது அவசியமென வலியுறுத்தினார்கள்.

ஐ. தே. கட்சியின் மாற்று யோசனைகள் பற்றி கருத்துத் தெரிவித்த தமிழ் முஸ்லிம் அரசியல் கட்சிகள் தெரிவிக்கப் பட்ட இவ் யோசனைகள் பூரணத்துவம் இல்லாததனால் தமது நிலைப்பாட்டைத் தெரிவிப்பது அர்த்தமற்றது எனக் குறிப்பிட்டுள்ளன. சிறு பான்மையினருக்கு இவ் யோசனைகள் பயனற்றது என்றும் குறிப்பிட்டனர்.

### தமிழ்..

கடந்த ஞாயிற்றுக்கிழமை கோவையின் பல்வேறு இடங்களிலும் இடம்பெற்ற குண்டு வெடிப்பினால் 60 அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தனர். 180 பேர் காயமுற்றனர்.

கோவையில் பாரதிய ஜனதாக் கட்சித்தலைவர் எல். கே' அத்வானி பேச இருந்த கூட்டத்திலும் குண்டொன்று வெடித்ததும்இங்குகுறிப்பிடத் தக்கது.

## மீளக்குடியமர்த்தும் பணிக்கு ஐ. நா. சபை உதவி வழங்கும்

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்த குடும்பங்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகளுக்கு ஐ. நா. சபை உதவி வழங்க முன்வந்துள்ளது.

ஐ. நா. சபையின் அமைப்புக்களான அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம், சிறுவர்நிதியம் சனத்தொகை நிதியம், உலக உணவுத்திட்டம் உணவு விவசாயஸ்தாபனம், அபிவிருத்தித் திட்டம் ஆகிய ஆறு அமைப்புக்களுமே மீள் குடியமர்வுக்கு உதவிவழங்கவுள்ளன.

இதன் முதற் கட்டமாக வலிகாமம், தீவகம், யாழ்ப்பாணநகரம், கரையோரப் பகுதிகளில் மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள அரச அதிகாரிகள் தீர் மானித்துள்ளனர்.

குடியமரும் பகுதிகளில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுதல், வீடுகள், பாடசாலைகளைப் புனரமைத்தல், சுகாதார வசதிகள், குடிநீர் வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படும்.

இந்நடவடிக்கைகள் யாவும் யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

### தலதா மாளிகை

## குண்டு வெடிப்பின் சூத்திரதாரி திருகோணமலையில் கைது

கண்டி தலதா மாளிகைக் குண்டுவெடிப்பில் தொடர்புடையவரென சந்தேகிக்கப்படும் நபரொருவரைப் பொலிசார் திருகோணமலைக்கட்டைப் பறிச்சானில் வைத்துக்கைது செய்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கண்டியில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட இச் சந்தேக நபர் கஞ்சிக்குடிச்சாறில் தயாரிக்கப்பட்ட குண்டுகளை பொரதீவில் வைத்து வாகனத்தில் பொருத்தித் தற்கொலைப் படையாளியிடம் ஒப்படைத்ததாகவும் விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளதாகவும், பொலிசாரிடமிருந்து தப்பித்துச் செல்வதற்காக முல்லைத்தீவு தப்பிச்செல்ல முற்படுகையிலே இவர் கைது செய்யப்பட்டதாகவும் அத்தகவல்கள் மேலும் தெரிவித்தன.

## போரில் அங்கவீனமுற்ற வீரருக்கு மேலும் பல சேம நலத்திட்டங்கள்

அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களிற்கு போதிய வசதிகளைச் செய்துதர அரசு சகல நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்,

அங்கவீனமுற்ற படைவீரர்கள் ரயில், பஸ்களில் இலவச பிரயாணங்களை மேற்கொள்ள வசதியாக ''பாஸ்கள்'' வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில் அங்கவீனமுற்ற படைவீரர்களிற்கு வீடுகளை கட்டிக் கொடுக்கும் திட்டமொன்றும் ஏற்கனவே செயற்படுத்தப் பட்டு வருவதாகவும் வீடுகளைக் கட்ட வசதியற்றவர்களுக்கு வசதியாக 1.5வீதம் குறைந்த வட்டியில் கடன் வசதி வழங்கும் திட்டமொன்றும் செயற்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். இதற்குத் தேவையான நிதி ஏற்கனவே ஒதுக்கப் பட்டிருப்பதாக. மேலும் தெரிவித்த அவர் யுத்தத்தில் அங்கவீனமுற்ற வீரர்களுக்கென பல சேம நலத்திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களது பொருளாதார நிலைமைகளை நிவர்த்தி செய்வதற்கான பல்வேறு சேமநலத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

### கீரிமலையில் திருத்தவேலை

எதிர்வரும் சிவராத்திரி தினத்தன்று கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக அங்குள்ள மண்டபங்களின் கூரைவேலைகள் தற்காலிகமாக திருத்தப்படுகிறது.

### இறுதித் தெரிவுப் போட்டி

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தினால்நடாத்தப்படும் பண்ணிசைப் போட்டித்தொடரின் இறுதித் தெரிவுப் போட்டி முன்னர் அறிவிக்கப் பட்டது போன்றுஇன்று நடைபெறுமென அறிவிக்கப் பட்டுள்ளது.

இன்று முற்பகல் 9.30இற்கு யா/இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கும் இறுதித்தெரிவுப் போட்டியில் முதலாம் சுற்றில் வெற்றி ஈட்டியமாணவர்கள் தவறாது பங்குபற்றுமாறு குழுவின் செயலாளர் இ.இரத்தினசிங்கம் கோரியுள்ளார்.

### அம்பாறையில்...

தாக்குதலிலேயே எட்டு ஊர் காவற் படையினர் பலியானதாக தெரியவருகிறது. இக் கொலனிப் பகுதியின் இருபுறமும் சிங்கள, முஸ்லீம் குடியேற்ற வாசிகள் செறிந்து வாழும் கொலனிகளும் உள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

### படையினர் திரும்ப திகதி நீடிப்பு

இலங்கை இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியபடையினர் மீண்டும் படையில்வந்து இணைவதற்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டகாலக்கெடு நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்துவிட்டது. இக் காலப்பகுதிக்குள் மீண்டும் படையில் சேர்ந்தால் அவர்களுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்குவதாக அறிவித்திருந்தார்.

ஆனால் இதுவரை ஆயிரம் படையினர்வரையே மீண்டும் படையில் வந்து இணைந்துள்ளனர்.

இதேவேள்ள ஓடிப்போன படையினர் எண்ணிக்கை சுமார் பத்தாயிரம்வரை என இராணுவ புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.

திருப்திகரமான அளவு படையினர் மீண்டும் இணையாததால் அரசு தான் விதித்த காலக்கெடுவை சற்றுத்தளர்த்தி உள்ளது. அதன்படி இம்மாதம் இருபத்தைந்தாம் திகதிவரை படையினர் மீண்டும் படையில் இணைய கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆறு மாதங்களில் அரசு அறிவித்த பொதுமன்னிப்புக்களில் இதுதான் அண்மையில் வெளிவந்த அறிவிப்பாகும். இதற்கு முன்னரும் பல தடவைகள் கால அவகாசம் நீடிக்கப்பட்டமை தெரிந்ததே.

### கொபி அனான் ஈராக் விஜயம்

ஐ. நா. வின் தலைமைச் செயலாளர் கொபி அனான் நேற்று ஈராக்கின் தலைநகர் பக்தாத்திற்குச் சென்றடைந்தார்.

ஈராக்கில் ஆயுத பரிசோதனையை ஐ. நா. சபை மேற்கொள்ள ஈராக் மறுத்ததைத்தொடர்ந்து அமெரிக்காவிற்கும் ஈராக்கிற்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையைத் தவிர்ப்பதற்காகவே கொபி அனான் பக்தாத் சென்றுள்ளார்.

### 28 பேர் அடங்கிய குழு விஜயம்

காங்கேசன் துறையிலுள்ள லங்கா சீமெந்து லிமிட்டெட் நிறுவனத்தை புனரமைக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக இருபத்தெட்டுப் பேர் கொண்ட ஊழியர் குழுவொன்று காங்கேசன் துறைக்குச்சென்று நிறுவனத்தைப் பார்வையிட அனுமதி வழங்கப் பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன,

### கனடாவில் இருந்து மட்டும் மூன்று மில்லியன் டொலர்

யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றிய பின் புலிகளுக்கு கனடாவிலிருந்து மட்டுமே மூன்று மில்லியன் டொலர்களுக்குமேல் கிடைத்திருக்கிறது.

- இச் செய்தியைப் பெப்ரவரி 9ம் தேதி ''ரைம்'' பத்திரிகை வெளியிட்டிருக்கிறது.

''இத்தனை பணமும் சுய விருப்பத்தின் பேரில் கொடுக்கப்பட்டது எனச் சொல்ல முடியாது'' என்றும் 'ரைம்' சொல்கிறது.

''சூரிய காந்தி'' நிறுவனத்துக்காக அவர்களது அச்சகத்தில் 1998ம் ஆண்டு பிப்ரவரி 21ம் தேதி 68/1, ராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ஆசிரியர்: க. குமாரசாமி.